**22TAU102**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA DEGREE EXAMINATION DECEMBER 2022**
(First Semester)

Branch – **TAMIL**

**IKKAALA ILLAKIYAM**

Time: Three Hours Maximum: 50 Marks

பகுதி– அ

சரியானவிடையைத் தேர்ந்தெடுத்துஎழுதுக. 5x1=5

1. ‘கூலிமிகக் கொடுப்பார் கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்’ – யார்?
   அ) மாணவன் ஆ) சேவகன்
   இ) தோழன் ஈ) அரசன்

2. ‘பொம்மை’சிறுகதையின் ஆசிரியர்யார்?
   அ) ஜெயகாந்தன் ஆ) புதுமைப்பித்தன்
   இ) அம்பை ஈ) பிரபஞ்சன்

3. சூரியகாந்தன் எழுதிய புதினம் எது?
   அ) அலைஓசை ஆ) கிழக்குவானம்
   இ) சித்திரப்பாவை ஈ) கரித்துண்டு

4. வேலைக்காரி நாடகத்தில் வரும் ஆனந்தனின் தந்தை பெயர் என்ன?
   அ) சுந்தரம் பிள்ளை ஆ) இலட்சுமணபிள்ளை
   இ) வேதநாயகம் பிள்ளை ஈ) முருகேசப் பிள்ளை

5. சங்க இலக்கியக் களவுப் பாடல்களில் அதிக எண்ணிக்கையிலான பாடல்கள் எவ்வகை சார்ந்தவை?
   அ) இயற்கைப் புணர்ச்சி ஆ) இடந்தலைப்பாடு
   இ) பாங்கற் கூட்டம் ஈ) தோழியிற் புணர்ச்சி

பகுதி– ஆ

ஒருபக்கஅளவில் விடைதருக. 5x3=15

6. அ) கண்ணன் தோழனாக நின்ற தன்மையை விளக்குக.
   (அல்லது)
   ஆ) ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் குழந்தைகளின் உலகம் எவ்வாறு வெளிப்படுகிறது?

7. அ) ஏழ்மை நிலையில் வாழ்வோரின் அவலநிலையை ‘பொன்னகரம்’ சிறுகதை வழிநின்று புலப்படுத்துக.
   (அல்லது)
   ஆ) ‘சாம்பல் மேல் எழும் நகரம்’ சிறுகதையின் கதைக்களத்தை விளக்குக.

8. அ) கரித்துண்டு புதினத்தில் வரும் திருவேங்கடத்தின் ஈகைப்பண்பை விளக்குக.
   (அல்லது)
   ஆ) குறிஞ்சித்தேன் புதினத்தில் ரங்கனின் பாத்திரப்படைப்பை எழுதுக.

9. அ) வேலைக்காரி நாடகத்தில் வரும் சரசாவின் ஆதிக்க மனோபாவத்தை விவரிக்க.
   (அல்லது)
   ஆ) ‘பாரிபடுகளம்’ நாடகத்தில் நடுகல் வழிபாடு எங்ஙனம் காட்சிப்படுத்தப்படுகிறது?

**Cont...**

10. அ) திருவனந்தபுரத்து அரசரிடம் தம்பிரான் பரிசுபெற்ற நிகழ்வை எழுதுக.
(அல்லது)
ஆ) 'செலவழுங்கல்' குறித்து வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுவனயாவை?

பகுதி– இ

கட்டுரைவடிவில் விடைதருக. 5x6=30

11.அ) கண்ணன் தனக்குத் தாயாக இருந்து காத்தமையைப் பாரதியார் எவ்வாறு விளக்குகிறார்?
(அல்லது)
ஆ) வைரமுத்துவின் படைப்பாளுமையை 'தமிழுக்கு நிறம் உண்டு' கவிதைத் தொகுப்பின் வழிநின்று கட்டுரைக்க.

12.அ) 'யுகசந்தி' சிறுகதையில் காலமாற்றத்தை இயல்பாக ஏற்றுக் கொள்ளும் கௌரிப்பாட்டியின் மனோநிலையை விவரிக்க.
(அல்லது)
ஆ) 'வீழ்தல்' சிறுகதை உணர்த்தும் கருத்தைக் கட்டுரைக்க.

13.அ) கரித்துண்டு நாவலில் இல்வாழ்க்கையின் சிறப்பு போற்றப்படும் தன்மையை எடுத்தியம்புக.
(அல்லது)
ஆ) 'கிழக்கு வானம்' புதினத்தின் முதன்மைக் கதாப்பாத்திரங்கள் குறித்து எழுதுக.

14.அ) 'ஒன்றே குலம் : ஒருவனே தேவன்' என்பதை வேலைக்காரி நாடகத்தின் வழிநின்று நிறுவுக.
(அல்லது)
ஆ) பறம்புமலைத் தலைவன் பாரியின் மானவுணர்வினைக் கட்டுரைக்க.

15.அ) வறுமைப்புலி கட்டுரையில் உ.வே.சா. உணர்த்தும் கருத்துக்கள் யாவை?
(அல்லது)
ஆ) நெஞ்சைத் தொட்டதும் சுட்டதும் கட்டுரைகள் வழி இளைய சமுதாயத்தினருக்கு இறையன்பு உரைப்பன யாவை?

Z-Z-Z END